ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2445/50 - 2025 ජූලි මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.17

2445/50 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: WLP/LAN/FLD04/ACQ/28.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தின், வெலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், ஜம்புரெகொட மேற்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள, க. ஸி. 820167 பெனேடியன மேற்கு சேவா பியச அமைப்பதற்காக எடுத்துக் கொள்வதற்கு அவசியமாக உள்ளது:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: கொடவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், கட்டடம் ஒன்று மற்றும் மலசலகூடம் ஒன்று உள்ளது; உரிமை கோருபவர்: வெலிகம, பெனேடியன, கொடவத்தையில் வசித்து இறந்து சென்ற விக்கிரமதுங்க ஆச்சி பதிரணகே மெகிலின்; விஸ்தீரணம்: 0.0111 ஹெக்டயார்

மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வெலிப்பிட்டிய, பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எஸ். தில்ஹானி நதீகா,
பிரதேச செயலாளர்,
வெலிப்பிட்டிய.

EOG 07 - 0211